# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டு – மதிப்பீட்டுத் தாள்

## 2021 – 2022

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்:............................................................ நேரம்: 150 மணித்துளிகள்

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
TEDC

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. தைப்பொங்கல் ______________ ப் போற்றி நன்றி கூறும் நாள்.
   ( மழையை, கதிரவனை, நிலவை )

2. கற்பகதரு என அழைக்கப்படும் மரம் ______________ .
   ( பனை, வேம்பு, ஆலமரம் )

3. மண்ணைக் குழைத்து மட்பாண்டங்களைச் செய்பவர் ______________ .
   ( உழவர், நெசவாளர், குயவர் )

4. நகுதல் என்ற சொல்லின் பொருள் ______________ .
   ( சிரித்தல், அழுதல், கற்றல் )

5. அறிஞர்களுடன் சேர்ந்தால் நல்ல ______________ ப் பெறலாம்.
   ( அறிவு, அறிவை, அறிவுக்கு )

6. பறவைகளின் மகிழ்வுக்குக் காரணம் ______________ .
   ( வேற்றுமை, பகைமை, ஒற்றுமை )

7. **பழமொழி:**
   துறவிக்கு வேந்தன் ______________ .
   ( துரும்பு, அரும்பு, கரும்பு )

8. தஞ்சைப் பெருங்கோவிலைக் கட்டுவித்த மன்னன் ______________ .
   ( மாமல்லன், நரசிம்மபல்லவன், அருண்மொழித்தேவன் )

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
TEDC

9. "கலைகளிலே அவள் ஓவியம்" எனப் பாடியவர் ____________.

( கண்ணதாசன், ஔவையார், ஆறுமுகநாவலர் )

10. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று ____________ .

( திருக்குறள், சிலப்பதிகாரம், நாலடியார் )

11. வள்ளி நேற்றுப் பாடினாள். நாளை ____________ .

( பாடுவாள், பாடுகின்றாள், பாடுகின்றார் )

12. தோழி கூறிய நகைச்சுவையைக் கேட்டு பூவரசி ____________ எனச் சிரித்தாள்.

( படபட, மடமட, கலகல )

13. **விடுகதை:**

ஊருக்கு நடுவே உயர்ந்து நிற்கும்; உருவங்கள் பலவும் தாங்கி நிற்கும்; உச்சியில் குடம் தரித்திருக்கும் அது என்ன? ____________ .

( கோபுரம், வானம், கதிரவன் )

14. பலா + பழம் என்பதைச் சேர்த்து எழுதினால் ____________.

( பலாபழம், பலாப்பழம், பலபழம் )

15. நான் தமிழ் நன்றாகப் பேசுவேன். நீங்களும் தமிழ் நன்றாகப் ____________ .

( பேசினேன், பேசுவார்கள், பேசுவீர்கள் )

16. மருதநிலத்தில் வாழும் விலங்கு ______________ .

( குதிரை, எருமை, யானை )

17. ஆற்றங்கரையில் மரமும் அரசு அறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே... என்ற பாடல் இடம்
பெற்ற நூல் ______________ .

( நல்வழி, நாலடியார், திருக்குறள் )

18. ஆண்டு விழாவில் நிலா கூறிய கவிதையைக் ______________ மகிழ்ந்தனர்.

( செய்து, கேட்டு, சொன்ன )

19. செயற்கரிய செயலைச் செய்வோர் ______________ .

( பெரியோர், சிறியோர், தீயோர் )

20. கணிகன் என்ற சொல் குறிப்பது ______________ .

( சோதிடனை, புலவரை, மறவரை )

21. கேடில் விழுச்செல்வம் எனக் கூறியவர் ______________ .

( பாரதியார், திருவள்ளுவர், பாவேந்தர் )

22. புகழன் ______________ பாம்பைக் கண்டு நடுங்கினான்.

( சீறிய, முழங்கிய, பிளிறிய )

23. மீன், ஆனைந்து என்பன ______________ நில மக்களின் உணவாகும்.

( குறிஞ்சி, மருதம், பாலை )

24. முல்லைப்பூ ______________ என நறுமணம் வீசியது.

( கலகல, பளபள, கமகம )

25. காலித்தல் என்பது ______________ .

( எழுதல், மறைதல், விழித்தல் )

26. சிற்றுயிரிகளில் ஒன்று ______________ .

( நாய், எலி, பூனை )

27. ஒன்று திரண்டால் வலிமை பெறும் கொடி ______________ .

( மல்லிகை, முல்லை, அடம்பன் )

28. எறும்புகள் ______________ ஊர்ந்து செல்லும்.

( சாரிசாரியாக, படிப்படியாக, குவியல்குவியலாக )

29. ஆழமற்ற கடலைப் ______________ என்று அழைப்பர்.

( பரவை, பறவை, ஆழி )

30. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களுள் ஒருவர் ______________ .

( ஔவையார், கபிலர், ஆறுமுகநாவலர் )

புள்ளிகள் 30



TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.

1. ஓவியா என்றும் ____________________ இருப்பாள்.

( பொறுமை )

2. நாங்கள் ____________________ மதிக்க வேண்டும்.

( பெற்றோர் )

3. மான் ____________________ நன்றி கூறியது.

( பறவை )

4. விடாது பெய்த ____________________ வயல்கள் நிரம்பின.

( மழை )

5. இனியன் ஏற்றிய பட்டம் ____________________ பறக்கின்றது.

( வானம் )

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL TEDC

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. ஆடற்கலையின் இரு பெரும் பிரிவுகளும் எவை?

2. யாருடைய நட்பு எமக்குத் துன்பம் தரும்?

3. காடும்காடுசார்ந்த நிலம் எது? அந்நில மக்களை எவ்வாறு அழைப்பர்?

4. கல்லாலான சங்கிலிகள் எங்கே காணப்படுகின்றன?

5. விருந்தோம்பல் மேலோங்கி நிற்கும் தமிழர் திருநாள் எது?

6. கண்பார்வை அற்றோரும் கண்டுணரும் கலை எது?

7. இளங்கோ அடிகளின் தந்தையார் பெயர் என்ன?

புள்ளிகள் 10

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

4) **கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து கவிதையை நிரப்புக.**

## நற்பண்பு

| | | |
|---|---|---|
| வேண்டும் | அறிவு | தூய்மை |
| பழக்கம் | கற்க | |

அதிகாலை விழிக்கின்ற

________________ வேண்டும்

ஆண்டவனை மறக்காத

பக்தி ________________

இதயத்தில் ________________ ஒன்றே

எண்ணல் வேண்டும்

ஈகையினை இளம் அகவையில்

பேணல் வேண்டும்

உதிக்கின்ற செங்கதிர்போல்

________________ வேண்டும்

ஊக்கமுடன் கல்வியினைக்

________________ வேண்டும்

புள்ளிகள் 10

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
TEDC

5) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| முழவுகள் | மக்களுக்கு | நன்கு |
| இசைக்கருவிகளில் | தோற்கண் | |

பண்டைத் தமிழர் இசையின் நுணுக்கங்களை ______________ அறிந்திருந்தனர். அவர்கள் பல்வேறு இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர். ______________ தோற்கருவிகள் ஒரு வகையாகும். தோற்கருவிகளை ______________ என்பர். இவற்றுள் பறை தொன்மையும் சிறப்பும் உடையது. முன்னாளில் மங்கல நிகழ்வுகளையும் அரச கட்டளைகளையும் ______________ அறிவிக்கப் பறை அறைந்தனர். முரசு பறையின் தன்மையை ஒத்தது. ஆனால் இதில் ஒரு பக்கம் மட்டுமே ______________ உள்ளது. தமிழரின் பண்பாட்டில் முரசு சிறந்த இடம் வகித்தது.

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 10

## 6) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழீழத்துக்கு வெளியே தமிழர்கள் வாழும் பகுதி மலையகம் ஆகும். மலையகம் தென்றல் வீசும் சோலைகளால் நிறைந்திருந்தது. வானுற ஓங்கிய மரங்களின் மேல் முகில்கள் படர்ந்திருப்பது கண்கொள்ளாக்காட்சி. மலைகளிடையே அருவிகள் தவழ்ந்து வருவதும் குன்றுகளிடையே ஏறிப் பாய்வதும் அழகிற்கே அழகு. ஆங்கிலேயர் ஈழத்தைக் கைப்பற்றினர். பின்னர், மலையகத்தின் இயற்கை வளத்தைக் கண்டு, மகிழ்ந்தனர். தங்களது நுகர்வுப் பயிர்களான தேயிலை, கோப்பி, இறப்பர் தோட்டங்களை உருவாக்கினர். அவை பெருந்தோட்டப் பயிர்கள் எனக் கூறப்படுகின்றன. இன்று, ஈழத்தீவின் வருமானத்தில் பெருந்தோட்டப் பயிர்கள் முதலிடம் வகிக்கின்றன. மாந்த நடமாட்டமற்ற பகுதியாக இருந்த மலையகத்தைச் செல்வம் கொழிக்கும் இடமாக மாற்றியவர்கள் தமிழர். தமிழருடைய ஈடிணையில்லா உழைப்பினால், மலையகம் உலக மக்களைக் கவருகிறது.

1. தமிழீழத்துக்கு வெளியே தமிழர் வாழும் பகுதி எது?

___________________________________

2. மலையகம் எதனால் நிறைந்திருந்தது?

___________________________________

___________________________________

3. பெருந்தோட்டப் பயிர்கள் எவை ?

___________________________________

___________________________________

4. மலைகளிடையே எவை தவழ்ந்து வருகின்றன?

___________________________________

5. மலையகத்தைச் செல்வம் கொழிக்கும் இடமாக மாற்றியவர்கள் யார்?

___________________________________

புள்ளிகள் 10

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

## 7) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் நிரப்புக.

1. எமது ________________ இன்பதுன்பம் மாறிமாறி வரும்.
   ( வாழ்க்கையில், வாள்க்கையில் )

2. பூவுடன் சேர்ந்த நாரும் ________________ .
   ( மனக்கும், மணக்கும் )

3. தெற்காசிய நாடுகள் எங்கும் ________________ புலிக்கொடி பறந்தது.
   ( சோழரது, சோலரது )

4. பூவிழி வயிற்று ________________ துன்பப்பட்டாள்.
   ( வளியால், வலியால் )

5. மக்கள் ________________ தாயகத்திலிருந்து வெளியேறினர்.
   ( போரினால், போறினால் )

புள்ளிகள் 05

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

8) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற கதையைச் சுருக்கி எழுதுக.
- தைத்திருநாள்
- அங்காடி
  - அங்காடி நடைபெறும் நாட்கள்
  - விற்கப்படும் பொருட்கள்
  - அங்காடியில் நீர் காணும் காட்சிகள்
  - அங்காடியில் நீர் விரும்பி வாங்கும் பொருட்கள்

புள்ளிகள் 15

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
TEDC

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
TEDC